**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI &
Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts15sp012026.90
https://ngmtamil.in/

# சங்கப் பாக்களில் பழந்தமிழர் நம்பிக்கைகளும் வாழ்வியல் அவதானிப்புகளும்

**முனைவர் க. பழனிவேல்**
உதவிப்பேராசிரியர், தமிழ்ப் படைப்பாக்கத்துறை,
குமரகுரு பன்முகக் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் – 641 049
பேசி : 99444 86346, மின்னஞ்சல் : palanivel.k.bat@kclas.ac.in

**ஆய்வுச் சுருக்கம்**

மனித வாழ்வில் பல்வேறு கூறுகள் இன்றியமையாததாகக் காணப்படுகின்றன. எனினும் சிலவே மனிதனை உயிர்ப்புடன் இயங்குநிலைக்கு ஆட்படுத்தி வருகின்றன. அவற்றுள் குறிப்பாக மானுடத்தின் இருப்புக்கும் வளர்ச்சிக்கும் ஒருங்கிணைப்புக்கும் காரணியாக விளங்குவன நம்பிக்கைகள். இந்நம்பிக்கைகள் உலகின் பண்பட்ட, தொல்மிகு இனமான தமிழினத்திலும் காணப்படுகின்றன. இவற்றின் நோக்கம், பயன், தமிழினம் கொண்டிருந்த மாறுபட்ட நம்பிக்கைகள், இவற்றின்வழி வெளிப்படும் வாழ்வியல் சிந்தனைகள் ஆகியவற்றை ஆய்வுக் கண்ணோட்டத்தில் உற்றுநோக்கிப் பதிவுசெய்வது இக்கட்டுரையின் மையப் பொருண்மையாக அமைகிறது.

**திறவுச் சொற்கள்**

சங்க இலக்கியம், பழந்தமிழர், நம்பிக்கைகள், தேறு, வழிபாடு, சடங்கு, Sangam Literature, Ancient Tamils, Beliefs, Divination, Worship, Rituals.

## முன்னுரை

**நம்பினார் கெடுவதில்லை**
**நான்குமறைத் தீர்ப்பு**

என்ற அந்த மகாகவி பாரதியாரின் வாக்கு அனைவருக்கும் பற்றுக்கோடான உறுதிமிக்க வரிகள். வாழ்வின் அச்சாணியாகத் திகழும் நம்பிக்கையின் இன்றியமையாமையை உணர்த்தும் உண்மை வரிகள். இந்நம்பிக்கை குறித்த பழந்தமிழரின் சங்க இலக்கியப் பதிவுகள், நம்பிக்கை குறித்த எண்ணங்கள், இவற்றால் பெற்ற பயன், உளவியல் காரணங்கள், மேம்பாட்டிற்கும்

கட்டுப்பாட்டிற்கும் வினையூக்கியாகத் திகழ்ந்த தன்மை ஆகியவற்றை ஆராய்ந்து விளக்குவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**நம்பிக்கை குறித்த அறிஞர்கள் கருத்தும் இலக்கியப் பதிவுகளும்**

மக்கள் அனைவருமே தங்கள் வாழ்வில் நம்பிக்கை கொண்டுள்ளனர் என்பது உறுதி. அவர்கள் கடவுள் ஏற்பாளர்களாக இருந்தாலும் சரி., மறுப்பாளர்களாக இருந்தாலும் சரி. அவர்களிடத்து நம்பிக்கை நிச்சயம் உண்டு எனலாம். காரணம் மனிதனின் ஒவ்வொரு செயல்பாடுமே நம்பிக்கையின் அடிப்படையில்தான் மேற்கொள்ளப்பெறுகிறது. சான்றாக ஒருவர் ஒரு பெரிய கல்லை உடைக்கிறார் என்று வைத்துக்கொள்ளலாம். அவரால் அதனை உடைக்க முடியும் என்று நம்பிக்கை இருந்தால்தான் அதனை மேற்கொள்வார். ஒருவேளை அந்தக் கல் கடினமானது என்ன செய்தாலும் உடைக்க முடியாது என்று முன்கூட்டியே அவருக்குத் தெரிகிறது என்றால் அவர் அதனை உடைக்கும் முயற்சியில் ஈடுபடுவாரா? நிச்சயம் செய்யமாட்டார். அதுகால விரயம் என்று விட்டுவிடுவார். உறுதியாக ஒன்றைச் செய்வோம் அல்லது செய்ய முடியும் என்ற நம்பிக்கையில் தான் மக்கள் செயல்படுகின்றனர். இந்நம்பிக்கை குறித்து பலரும் தங்கள் கருத்தினைப் பதிவுசெய்துள்ளனர். அவர்களது மேற்கோளில் சில கவனத்திற்குரியன.

- **“நம்பிக்கை எதிர் காலத்துக்கு ஒளி தரும்; ஞாபகம் இறந்தகாலத்துக்கு முலாம் பூசும்”** என்று பிரபல இங்கிலாந்து நாவலாசிரியர் மற்றும் கவிஞர் மூர் (ஜார்ஜ் மூர் (George Moore) கூறியுள்ளார்.
- பிரபல ஆங்கிலக் கவிஞர் ஆல்ஃபிரெடு டென்னிஸ் (Alfred Tennyson) தனது “The mighty hopes that make us men” என்ற நூலில், **“நம்மை மனிதராக்குபவை மாபெரும் நம்பிக்கையே”** என்று கூறியுள்ளார்.
- **“நம்பிக்கையில்லாத இடத்தில் முயற்சியும் இருக்க முடியாது”** என்று ஆங்கில அறிஞரும் எழுத்தாளருமான சாமுவேல் ஜான்ஸன் (Samuel Johnson) தனது *The Rambler* என்ற கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.
- மேனாட்டு அறிஞர் அடிலி ஷீரீட் என்பார் **“நம்பிக்கையே வாழ்வு வாழ்வே நம்பிக்கை”** என்றார்.

தமிழிலக்கியங்களில் நம்பிக்கை குறித்த செய்திகள் இடம்பெற்றுள்ளதைக் காணலாம். நம்பிக்கையோடு தொடர்புடைய சொற்களாக தேறு, தேறுதல், நம்பி, நம்பிக்கை, நம்பிய, நம்பு, நம்புதல், நம்பும், நசை, எதிர்நோக்கு, பற்று, திண்மை ஆகியன இடம்பெற்றுள்ளன. ஆங்கிலத்தில் Faith, Believe என்பன நம்பிக்கைக்கு நிகராக வழங்கப்படும் சொற்களாகும்.

தொல்காப்பியத்தில் நம்பு, மேவு, தேறு, தேற்றம் ஆகிய சொற்கள் நம்புதல் மற்றும் விரும்புதல் என்ற பொருண்மையில் வந்துள்ளன. சங்க இலக்கியத்தில் கீழ்க்காணும் சொற்கள் நம்பிக்கை எனும் பொருள் தரக்கூடியனவாக அமைந்துள்ளன.

**தேறுதல் - பண்பில சொல்லும் தேறுதல் செத்தே (ஐங்குறு. 267/5)**

**தேறும் - கண்டும் நின் மொழி தேறும் பெண்டிரும் ஏமுற்றார் (கலி. 74/9)**

**தேறுவது - பொய்ம்மொழி தேறுவது என் (கலி. 113/21)**

**தேறேன் - யானோ தேறேன் அவர் பொய் வழங்கலரே (குறுந். 21/5)**

**நம்பி - சேரி அம் பெண்டிர் சிறு சொல் நம்பி (நற். 175/7,8)**

**மாயோள் நலத்தை நம்பி விடல் ஒல்லாளே (நற். 180/5)**

**பரிவுதர தொட்ட பணிமொழி நம்பி (நற். 378/10)**

**ஏதிலன் பொய்ம்மொழி நம்பி ஏர் வினை (அகம். 117/3**

**மாய பரத்தன் வாய்மொழி நம்பி (அகம். 146/9)**

**இன் சொல் பிணிப்ப நம்பி நம்-கண் (அகம். 153/6)**

**நயந்து நாம் விட்ட நல் மொழி நம்பி (அகம். 198/3)**

**ஏதிலாளன் காதல் நம்பி (அகம். 275/10)**

**வாயார நின் இசை நம்பி (புறம். 136/17)**

**நம்பிய - நல்லேன் யான் என்று நலத்தகை நம்பிய (கலி. 108/17)**

**நம்புண்டல்- அன்னான் சொல் நம்புண்டல் யார்க்கும் இங்கு அரிது ஆயின் (கலி. 47/10)**

**நம்புதல்- நாடல் சான்றோர் நம்புதல் பழி எனின் (நற். 327/1)**

**நம்பும் - கொன்னும் நம்பும்-குரையர் தாமே (நற். 208/7)**

பக்தி இலக்கியமான மூவர் தேவாரத்தில்,

**நம்பினார் காணல் ஆகா வகையது ஓர் நடலை செய்தார் (தேவா. 271/2)**

**நம்பினார் என்று சொல்லி நன்மையால் மிக்கு நோக்கி (தேவா. 569/3)**

என்று அப்பரும்

**நம்பிரானார்க் கிடமாவது நம்திரு நாவலூரே (தேவா. 171/4)** என்று சுந்தரரும் குறிப்பிடக் காணலாம். நீதி இலக்கியம், காப்பியம் மற்றும் சிற்றிலக்கியங்களிலும் நம்பிக்கை எனும் சொல் குறித்த பதங்களைக் காணமுடிகிறது.

பாரதியார் தனது படைப்பான பாஞ்சாலிசபத்தில்,

**நம்பி நின் அடி தொழுதேன் என்னை (பாஞ்சாலி. 5 297/4)** என்றும்,

வசன கவிதையில்,

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

**நல்லதை நம்பி நல்லதே செய்க (வசன. கவி.7 0/90)** என்றும் "நம்பி" என்ற சொல்லை நம்பிக்கை என்ற பொருளில் கையாண்டுள்ளார்.

நாட்டுப்புறங்களில் வழங்கப்படும் பழமொழிகளில் **"யானையின் பலம் தும்பிக்கை, மனிதனின் பலம் நம்பிக்கை"** என்பது நம்பிக்கையின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது.

தமிழினத்தைப் பொறுத்தவரை "நம்பிக்கை" வாழ்க்கைக்கு வழிகாட்டும் ஓம்காரம். அயற்சி கொள்ளும் வேளையிலும் மனதில் மகிழ்ச்சியைக் கடத்தும் மந்திரச்சொல். வாழ்க்கைப் போராட்டத்தில் களமாடுபவர்களின் கவசச் சொல். மதம், இனம், சாதி, மொழி என எல்லா எல்லைகளையும் கடந்த உன்னத சொல். நாளை என்ற சிந்தனையின் வித்து. தடைகளைக் கடக்கச் செய்யும் தரமான சொல். சுருக்கமாக நம்பிக்கை வெறும் சொல் மட்டுமன்று... அனைவருக்கும் வாழ்வளிக்கும் வரம். இந்நம்பிக்கை குறித்து தமிழிலக்கியங்களில் பல பதிவுகளைக் காணமுடிகிறது.

**சங்கப் பாக்களில் பழந்தமிழர்களின் நம்பிக்கைகள்**

**1. ஊழ் குறித்த நம்பிக்கை**

தமிழர்கள் ஊழ்வினையே மனித வாழ்வை தீர்மானிப்பதாக நம்பியுள்ளனர். ஒருவனுக்கு நன்மை தீமை வந்துசேர்வது மட்டுமல்ல காதலன் – காதலியோ அல்லது கணவன் - மனைவியோ அமைவதுகூட ஊழினால்தான் என்று நம்பினர். காரணம் பிறப்பு, இறப்பு மட்டுமல்ல இல்லறத்துணையும் இயற்கை சார்ந்தது என்று நம்பினர். குறுந்தொகை பாடலொன்று இளமையில் பகைவராக இருந்த இருவர் காதலராக மாறுவது ஊழ்வினையே என்று குறிப்பிடுகிறது. பாலைத்திணையில் கண்டோர் கூற்றாக அமைந்துள்ள இப்பாடல் மோதலே காதலுக்கு முதற்படி என்பதை நிறுவுவதாக அமைந்துள்ளது.

**இவனிவ ளைம்பால் பற்றவும் இவளிவன்**
**புன்றலை யோரி வாங்குநள் பரியவும்**
**காதற் செவிலியர் தவிர்ப்பவுந் தவிரா**
**தேதில் சிறுசெரு வுறுப மன்னோ**
**நல்லைமன் றம்ம பாலே மெல்லியல்**
**துணைமலர்ப் பிணைய லன்னவிவர்**
**மணமகிழ் இயற்கை காட்டி யோயே.**

**- (குறுந்தொகை - 229)**

இவன் இவளது கூந்தலைப் பிடித்து இழுக்கவும் இவள் இவனது புல்லிய தலை மயிரை வளைத்து இழுப்பாளாய் ஓடவும் அன்புடைய செவிலித்தாயார் இடைமறித்துத் தடுக்கவும் ஒழியாமல் அயன்மையை உடைய சிறிய சண்டையை முன்பு பொருந்துவார்கள்; இப்பொழுது மலரைப் பிணைத்த இரட்டை மாலையைப் போன்ற இவர்கள் மணம் புரிந்து மகிழும் இயல்பை உண்டாக்கினாய்; ஆதலின் ஊழ்வினையே நீ நன்மையையுடையாய் என்பது பொருள். சண்டையிட்டவர்கள் இன்று மணம் புரிந்துகொண்டது ஊழ்வினையால்தான் என்ற பழந்தமிழர் நம்பிக்கை இதன்வழி வெளிப்படுகிறது. மனித இயல்பை மீறிய செயல்கள் உலகில் உண்டு என்பதை

உணர்த்தவும் ஒரு செயலுக்கான காரண-காரியங்களை இயல்பில் விளக்க முடியாத போது மனதை அமைதிப்படுத்தவும் அச்செயலை இயல்பாக ஏற்றுக்கொள்ளவும் வலிமையான ஒரு கடத்தி தேவைப்பட்டது. அதற்கு ஊழ் என்று பெயரிட்டனர். திருவள்ளுவர் **“ஊழ்”** என்ற அதிகாரத்தையே படைத்துக் காட்டியுள்ளதும் **“ஊழ்வினை உருத்துவந் தூட்டும் என்பதூஉம்”** என்று காப்பியத்தின் உறுதிப்பொருளாக சிலப்பதிகாரம் உரைத்துள்ளதும் ஊழ் வலிமையுடையது என்பதை எடுத்துக்காட்டுவதாய் அமைந்துள்ளது.

சில அசாதாரண செயல்கள் அல்லது நிகழ்வுகள் ஏற்படும்போது அதற்கு உடனடியாக காரணம் கண்டறியமுடியாத போதும் அறிவில் தடுமாற்றம் ஏற்படும்போதும் அதனைக் கடந்து செல்ல ஊழைக் காரணம் காட்டினர். ஆனால் இப்பாடலில் அவ்வாறு அசாதாரண செயலோ பெருநிகழ்வோ நிகழவில்லை. ஆனால் வரைவு எனும் இனிய மணம் நடைபெற்றுள்ளது. அவர்களுக்குள் பிரிவு ஏற்பட்டாலும் பிரியக்கூடாது என்ற உள்வேட்கையும் நற்றுணை அமைவது அரிது என்பதை உணர்த்தவும் ஊழே இதனை (நல்ல துணையை) உனக்கு அமைத்துக் கொடுத்துள்ளது. அதனைக் கெடுத்துக் கொள்ளாமல் மகிழ்வோடு வாழுங்கள் என்பதை வலியுறுத்தவே இப்பாடல் பாடிய புலவர் மோதாசானார் ஊழை முன்னிலைப்படுத்தியுள்ளார்.

**2. சொர்க்கம் – நரகம் மற்றும் இரந்துண்ணுவது குறித்த நம்பிக்கை**

சொர்க்கம் நரகம் என்ற நம்பிக்கைகள் மக்களிடம் அதிகமாகக் காணப்படுகின்றன. நன்மை செய்தால் சொர்க்கத்திற்குச் செல்லலாம். தீமை செய்தால் நகரத்திற்குச் செல்வர் என்ற ஆழ்ந்த நம்பிக்கை பழந்தமிழரிடம் இருந்ததை இலக்கியங்கள்வழி தெரிந்துக்கொள்ள முடிகின்றது.

தமிழர்கள் மட்டுமின்றி அமெரிக்கர், ஜப்பானியர் போன்ற நாட்டினருக்கும் சொர்க்கம் நரகம் மீது ஆழ்ந்த நம்பிக்கை இருந்துள்ளது. போர்க்களத்தில் வீரர்கள் விழுப்புண்பெற்று மாண்டுபோனாலும் அவர்கள் தேவர்கள் உலகத்திற்குச் செல்வர் என்றும் அதுதான் அவர்களுக்குப் புகழ் என்றும் மதிக்கப்பட்டது. புறநானூற்றில்,

**“கொடி நுடங்கு யானை நெடுமாவளவன்**
**தேவர் உலகம் எய்தினன்”** (புறநானூறு 228)

என்ற பாடல்வழி யானைப் படையையுடைய நெடுமாவளவன் வீரமரணத்தால் தேவர் உலகத்தை அடைந்தான் என்று ஐயூர் முடவனாரும்,

**“கையகத்து உயர்ந்த கன்றுடைப் பல்லான்**
**நிரையொடு வந்த உரையான் ஆகி**
**உரிகளை அரவ மானத் தானே**
**அரிது செல் உலகில் சென்றனன் உடம்பே**
**கானச் சிற்றியாற்று அருங்கரைக் கால் உற்று”** (புறநானூறு 260)

என்ற பாடல்வழி ஆனிரை மீட்ட போரில் குறுநில மன்னனொருவன் மீது பகைவர் அம்புகளைத் தொடுத்தனர். ஆனிரை மீட்ட களிப்பில் துடியை முழக்கி இறந்த அவன் அரிதாகக் கிட்டக்கூடிய

மேலுலகம் சென்றான் என்று வடமோதங்கிழாரும் உரைத்துள்ளனர். இதன்வழி வீரமரணமும் சொர்க்கத்தை அடையும் ஒரு வழியாகக் கருதியமை புலப்படுகிறது. காரணம் தமிழர் மரபில் வீரமரணம் என்பது முக்கியத்துவம் கொண்டதாகவும் மரியாதைக்கும் புகழுக்கும் உரியதாக எண்ணப்பட்டது. இதனால் பழந்தமிழரிடம் மாறுபட்ட ஓர் நம்பிக்கை இருந்தது.

குழந்தை பிறந்து இறந்தாலும் அல்லது இறந்தே பிறந்தாலும் வாளால் உடலைக் கீறி அடக்கம் செய்யும் முறை இருந்தது. காரணம் வீரமரணமே சொர்க்கத்திற்கு அழைத்துச் செல்லும் என்று நம்பினர். அதனால்தான் பெண்கள் மார்பின் வீரப்புண்பட்ட ஆடவரையே விரும்பினர். புறமுதுகில் காயம்பட்டவரை மணம் செய்வதைத் தவிர்த்தனர். இதனை,

**குழவி இறப்பினும் ஊன்தடி பிறப்பினும்**
**ஆள் அன்று என்று வாளின் தப்பார்**
**தொடர்ப் படுஞமலியின் இடர்ப் படுத்து இரீஇய**
**கேள் அல் கேளிர் வேளாண் சிறுபதம்**
**மதுகை இன்றி வயிற்றிதுத் தீத் தணிய**
**தாம் இரந்து உண்ணும் அளவை**
**ஈன்மரோ, இவ் உலகத்தானே?**

**— புறநானூறு 74**

என்ற சேரன் கணைக்கால் இரும்பொறையின் பாடல்வழி அறியலாம். மேலும் இதே பாடலில் மற்றொரு நம்பிக்கையும் புலப்படுத்தப்பட்டுள்ளது. அதாவது உயிர்போகும் தருவாயிலும்கூட இரந்துண்ணக் கூடாது. அவ்வாறு இரந்துண்ணுவது இழிவானது என்று நம்பப்பட்டுள்ளது.

**3. கனவு நம்பிக்கை**

சங்கப் பாடல்கள் பலவற்றில் கனவுகள் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன. தமிழர் மரபில் கனவிற்கு முக்கியமான இடமுண்டு. தாம் நேரடியாக அடைய முடியாத ஒன்றை கனவில் அடைந்து அது உண்மையென நம்பி பின் கண் விழிக்கையில் அது கனவென்று அறியும்போது மனம் வருந்தும். ஆனால் நேரடியாக இல்லாவிட்டாலும் கனவிலாவது அடைந்துவிட்டது உள்ளுக்குள் மகிழ்ச்சியை ஏற்படுத்தும். ஒவ்வொருவருக்கும் கனவு என்பது வரும். உண்மையில் அதன்படி நிகழலாம். அல்லது நிகழாமலும் போகலாம். ஆனால் அது உறுதியாக நிகழும் என்று நம்பப்படுகிறபோது மகிழ்ச்சியையும் ன்பத்தையும் ஏற்படுத்துவதாக அமைந்துவிடுகிறது.

சங்க கால மக்களிடம் கனவு குறித்த நம்பிக்கை பரவலாக இருந்தது. அவர்கள் கனவுகள் எதிர்கால நிகழ்வுகளை முன்னறிவிக்கும் என மக்கள் நம்பினர். கலித்தொகையின்,

**“பொய் கூறேன் அன்ன வகையால் யான் கண்ட கனவு தான்”**

**- கலித்தொகை - 92/59**

என்ற இந்தப் பாடலடி இதனை உணர்த்தும் சிறந்த சான்றாகும். தலைவி தலைவன் பரத்தையரின் ஊடல் தணிப்பதாக கனவு கண்டு அவனுடன் ஊடல் கொள்கிறாள். காரணம் தான் கண்ட கனவு

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

உண்மையாகி விடுமோ என்ற அச்சம். தமிழர்களிடம் குறிப்பாக பெண்களிடம் கனவு பலிக்கும் என்ற நம்பிக்கை ஆழமாக வேரூன்றி இருந்த இப்பாடல்வழி அறியமுடிகிறது.

4. **விண்மீன் குறித்த நம்பிக்கை**

தமிழர்கள் அறிவிலும் பண்பிலும் மேம்பட்டவராகத் திகழ்ந்துள்ளனர் என்பதை சங்கப் பாடல்கள் உணர்த்துகின்றன. வானியலில் தேர்ச்சி பெற்ற அவர்களது அறிவியல் அறிவு பாடல்வழிப் பதிவுசெய்யப்பட்டுள்ளது. அதேவேளை வானியலில் விண்மீன் சார்ந்த நம்பிக்கையும் அவர்களிடத்து இருந்துள்ளதும் புலனாகிறது. அதாவது வெள்ளி எனப்படும் சுக்கிரன் தெற்குத் திசைக்குச் சென்றால் நாட்டில் பஞ்சமும் வறட்சியும் ஏற்படும் என்று நம்பியுள்ளனர். இதற்கு,

**“வசையில்புகழ் வயங்குவெண்மீன்**
**திசைதிரிந்து தெற்கேகினும்**
**தற்பாடிய தளியுணவிற்**
**புட்டேம்பப் புயன்மாறி”**

**- பட்டினப்பாலை**

**“அலங்கு கதிர்க் கனலி நால்வயின் தோன்றினும்**
**இலங்கு கதிர் வெள்ளி தென்புலம் படரினும்”**

**- புறநானூறு - 35**

என்ற இரு பாடலடிகளும் சான்றாகத் திகழ்கின்றன. இதனை மூடநம்பிக்கை என்று புறந்தள்ளிவிடவும் முடியாது. ஏனெனில் வானில் அவ்வாறு வெள்ளி தென்திசை தோன்றும்போது பருவநிலை மாறும் என்பதை கணித்திருக்கலாம். ஆனால் வெள்ளியின் திசை மாற்றம் குறித்த இந்த நம்பிக்கை மக்களுக்குக் கவலையளிக்கக் கூடியது என்பது மட்டும் உறுதி.

5. **வாழ்த்தில் நம்பிக்கை**

பழந்தமிழ் மக்கள் பிறரை வாழ்த்துவதில் உண்மையான உள்ளன்பு கொண்டவர்களாகத் திகழ்கின்றனர். இறைவன், உலகம், அரசன், வீரன், பெண் என எவராயினும் வாழ்த்து பெறுபவர் உவகையெய்தும் வண்ணம் வாழ்த்துவர். அத்தகு தமிழர்கள் மணம் உள்ளிட்ட நற்காரியங்களுக்குச் சென்று வாழ்த்தும்போது சிலநெறிமுறைகளைக் கையாண்டுள்ளனர்.

பழந்தமிழர் நெல்லும் மலரும் நீரும் நன்மையின் சின்னங்கள் என நம்பினர். எனவேதான் இறைவழிபாட்டிலும் நல்நிகழ்வுகளிலும் நெல்லுக்கும் மலருக்கும் நீருக்கும் முக்கியத்துவமளித்தனர். குறிப்பாக வாழ்த்துவதற்கும், இறைவனைப் போற்றி வழிபடுவதற்கும் நெல்லையும் நீரையும், நெல்லையும் மலரையும் கொண்டு வாழ்த்தி வழிபட்டமையை சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. அதேவேளையில் அவர்களிடத்து மலரும் நெல்லும், நெல்லும் நீரும் கொண்டு வாழ்த்துவதால் தீய சக்திகளிடமிருந்து பாதுகாக்கும் வளமைப் பெருக்கும் என்ற நம்பிக்கையும் இருந்தது. இதனை,

**“நீரொடு சொரிந்த ஈரிதழ் அலரி**
**பல்லிருங் கதுப்பின் நெல்லொடுதியங்க**
**வதுவை நன்மணம் கழிந்தபின்னை**
**எனும் அகநானூற்றுப் பாடல் அடிகளும்,**
**யாழிசை இனவண்டு ஆர்ப்ப நெல்லொடு**
**நாழிகொண்ட நறுவீ முல்லை”**

**- முல்லைப்பாட்டு**

என்ற முல்லைப்பாட்டு அடிகள் தெரிவிக்கின்றன. இதனை வெறும் நம்பிக்கையாக மட்டும் கொள்ளாமல் வாழ்த்து பெறுபவர் நல்லபடியாகத் துன்பமின்றி மகிழ்வோடு வாழ வேண்டும் என்ற உள்ளக் கிடக்கை வெளிப்படுத்துவதாகவும் கொள்ளலாம்.

**நிறைவுரை**

சங்க இலக்கியங்கள் பண்டைத் தமிழர்களின் வாழ்க்கை, பண்பாடு, சமூகம், அரசியல், சமயம் ஆகியவற்றை அறிய உதவும் முதன்மையான வரலாற்று ஆவணங்களாக விளங்குகின்றன. அவற்றில்

- யானையின் மேல் செல்லும் மன்னர் பல்லி சொல் கேட்டுப் பின் வாங்கினார்
- பேயை விரட்ட யாழ் இசைக்கப்பட்டது.
- குளம், கடல் போன்ற பகுதிகளில் பேய் இருப்பதாக நம்பினர்.
- குற்றம் செய்பவர்களைப் பூதம் தண்டிக்கும் என்ற நம்பிக்கை.

இதுபோன்ற தமிழர்களின் நம்பிக்கைகள் பல்வேறு வடிவங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. பழந்தமிழர் நம்பிக்கைகள் குறித்து இக்கட்டுரையில் பதிவுசெய்வதன் நோக்கம் இவற்றை அடுத்த தலைமுறைக்குக் கொண்டுபோய் சேர்க்க வேண்டும் என்பது மட்டுமல்ல. இந்நம்பிக்கைகள் தமிழர்களின் வாழ்வியலோடு இணைந்திருக்கும் பாங்கினையும் அதற்கான உளவியல் காரணங்களையும் ஆராயந்து எண்ண வேண்டும்.

**துணைநின்றவை**

1. இராசமாணிக்கனார், மா., **பத்துப்பாட்டு ஆராய்ச்சி**, சாகித்திய அகாதெமி, நியூடெல்லி, இரண்டாம் பதிப்பு -2012.
2. பாலசுப்பிரமணியன், முனைவர் கு.வே., **சங்க இலக்கியக் கொள்கைஃ** மீனாட்சி புத்தக நிலையம், மதுரை-01, முதற்பதிப்பு – செப்டம்பர் 2008.
3. மாணிக்கம், வ.சுப., **தமிழ்க் காதல்**, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், இரண்டாம் பதிப்பு – அக்டோபர் 2005.
4. ராமஸ்வாமி, ப., **உலக அறிஞர் சிந்தனைக் களஞ்சியம்**, நாதன் பதிப்பகம், சென்னை-35, முதுற்பதிப்பு – 2004.

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

5. வையாபுரிப் பிள்ளை, பேராசிரியர் எஸ். (தொகுப்பும் பதிப்பும்), **சங்க இலக்கியம் பாட்டும் தொகையும் (தொகுதி – 1, 2)**, பாரி நிலையம், பிராட்வே, சென்னை-01, இரண்டாம் பதிப்பு – ஆகஸ்டு 1967.
6. இணையவழித் தரவுகள்
   - https://www.vallamai.com/?p=85488
   - "பண்டைய தமிழரின் மூட நம்பிக்கைகள்" – Nakkeran
   - சங்கத் தமிழரின் நிமித்தம் சார்ந்த நம்பிக்கைகள் – வல்லமை
   - தமிழரின் நம்பிக்கைகள் - மெய்யெனப் படுவது - கருத்துக்களம்
   - https://ezhilvasanthan.blogspot.com/2014/11/blog-post.html